DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.55/2022**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.1

Defence

Court

Name : திருமலை
Father/ Husband Name : ராஜேந்திரன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

1,2,3 மற்றும் 6வது எதிரிகள் ஆஜர். 4,5 ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 19.09.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தேவகோட்டையில் குடியிருந்து வருகிறேன்.. கேபிள் ஆப்ரேட்டராக வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 14.08.2020ம் தேதி இரவு 08.00 மணியளவில் கைலாசநாதபுரத்தில் உள்ள ராகினி வீட்டுக்கு எதிர்புறத்தில் உள்ள கருப்பையா, ராமைய்யா, பாகம்பிரியாள், லெட்சுமி, மீனாள், பிரியா, சோபிகா, சங்கர், மருதுபாண்டி ஆகியோர்கள் வீட்டில் எனது அம்மா ராகினி இருக்கும்போது வீட்டில் வேலை பார்த்த ஆராயிக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்தது. அதற்கு நாங்கள் தான் தூாண்டிவிட்டு புகார் கொடுக்கசொன்னோம் என நினைத்து கருப்பையா, பாகம்பிரியாள், லெட்சுமி, மீனாள், சோபிகா, அத்துமீறி வீட்டில் நுழைந்து கையை பிடித்து இழுத்து தேவிடியா முண்ட என அசிங்கமாக பேசி கிரிக்கெட் மட்டையால் பாகம்பிரியாள் என்பவர்

எனது அம்மாவை அடித்து கருப்பையா என்பவர் பீர்பாட்டிலால் அடித்தும், மருதுபாண்டி கம்பால் அடித்தும் காயப்படுத்தியுள்ளனர்.

பின்னர் சேலையை பிடித்து இழுத்து எனது அம்மாவை மானபங்க படுத்தி எதிர்த்தார்போல் பாகம்பிரியான். எறிந்துவிட்டார். பின்னர் 108 ஆம்புலன்ஸை வரசொல்லி அனுப்பி வைத்துவிட்டோம். இன்றைக்கு தப்பித்துவிட்டாய் என்றைக்கா இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என சொன்னார்கள். பின்னர் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு எனது அம்மா ராகினியை சிகிச்சைக்கு சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று எதிரி மீனாள் என் மீதும், என் மனைவி மீதும், என் மாமியார் உட்பட அனைவரின் மீதும் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் ஓடிப்போய்பார்த்தேன் என்றால் சம்பவ இடத்தில் இருந்தேன். காயம்பட்ட நபரை நான் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துசெல்லவில்லை. 108 ஆம்புலன்ஸ் வரும்வரை காத்திருந்தேன்.

2. சம்பவ இடத்திற்கும் அரசு மருத்துவமனைக்கும் அரை கிலோமீட்டர் தூரம் தான் இருக்கும். சம்பவம் நடந்த அன்று நான் காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. சம்பவம் நடந்த போது சுற்றி நிறைய நபர்கள் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் இரண்டு கட்டிடங்கள் தள்ளி தான் நகர் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று எனது அம்மாவான புகார்தாரருடன் அரசு மருத்துவமனையில் தான் இருந்தேன்.

3. குற்றச்சம்பவம் நடந்த உடன் காவல்நிலையத்தில் உடனடியாக புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். சம்பவம் நடந்த உடன் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க நான் முயற்சி எடுக்கவில்லை என்றால் இரவாகிவிட்டது. அதனால் கொடுக்கவில்லை. எதிரி தரப்பில் கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் விசாரணைக்கு என்னை போலீசார் அழைத்தார்கள் என்றும், அதிலிருந்து நான் தப்பிப்பதற்காக எனது அம்மாவிற்கு எங்கோ ஏற்பட்ட

காயத்தை வைத்து மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து பொய்யான புகாருக்கு ஆதாரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. நான் சொன்னதுபோல் சொன்னஇடத்தில் சொன்னநேரத்தில் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை, வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் என்னிடம் எந்த வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.